பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 07 2025 **MONDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை ஆபரேஷன் சிந்தூர் எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. பிஎஸ்என்எல் நிறுவனம் லாபம் ஈட்டிவருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. செவிலியர்களுக்கு திமுக அரசு எப்போதும் பக்கபலமாக இருக்கும் என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

5. உலகக்கோப்பை மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் பட்டம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>**

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை ஆபரேஷன் சிந்தூர் எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான சிறப்பு விவாதத்தில் தொடக்க உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் நீதி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தீவிரவாதிகளையும், அவர்கள் முகாம்களையும் அழிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை பாதுகாப்புப்படை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

முப்படைகளும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளில், பாகிஸ்தானின் ஒன்பது தீவிரவாத கட்டமைப்புகள் தகர்க்கப்பட்டதாக அவர் கூறினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், பயிற்சியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இதில் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது படைகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பாகிஸ்தான் சரணடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாத செயல்களுக்கு பாகிஸ்தான் மீண்டும் ஆதரவு அளித்தால், ஆபரேஷன் சிந்தூர் தொடரும் என்றும் திரு ராஜ்நாத் சிங் எச்சரித்தார்.

<<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு சிதம்பரம் தெரிவித்த கருத்து கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இபோன்ற கருத்துக்கள் பாகிஸ்தானின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு அளிக்கும் வகையில் உள்ளது என்பதை திரு சிதம்பரம் உணர வேண்டும் என்றார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூரும், திரு சிதம்பரத்தின் கருத்துகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

அடுக்குமாடி குடியிருப்புச் சங்கங்களின் பரிவர்த்தனை 20 லட்சம் ரூபாயை தாண்டினால் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின்கீழ் கொண்டுவரப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சிறப்பு பிரிவில் இடம்பெற்றுள்ள மாநிலங்களை பொறுத்தவரை இது 10 லட்சம் ரூபாயாக இருக்கும் என்று தெளிவுபடுத்தினார்.

குடியிருப்புச் சங்கத்தில் இடம்பெற்றுள்ள ஒரு உறுப்பினரின் மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் 7 ஆயிரத்து 500-ஐ தாண்டினால், சரக்கு மற்றும் சேவை வரி செலுத்த வேண்டும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>

பிஎஸ்என்எல் நிறுவனம் லாபம் ஈட்டிவருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிறுவனம், கடந்த நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் 260 கோடி ரூபாயும், நான்காவது காலாண்டில் 280 கோடி ரூபாயும் லாபம் ஈட்டியதாக கூறினார்.

வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>

கோவிட் பாதிப்பு காலத்தில் செவிலியர் ஆற்றிய பணியை யாராலும் மறக்க இயலாது என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நடப்பாண்டிற்கான சிறந்த செவிலியர் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

***Sound Byte - உதயநிதி ஸ்டாலின் - 35 'Sec.)***

<<<<<>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக 525 தேர்தல் வாக்குறுதிகளை அளித்ததாகவும், இதில் பத்து சதவீதத்தைக்கூட நிறைவேற்றவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், 98 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக கூறி, திமுக மக்களை ஏமாற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<>>>>

நாசாவுடன் இணைந்து இஸ்ரோ தயாரித்துள்ள செயற்கைக்கோள் நாளை மறுநாள் விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு வி.நாராயணன் கூறியுள்ளார்.

இன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte - நாராயணன் - 58 Sec.)***

<<<<<>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 43 Sec.)***

<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஒரு கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பிலான கூடுதல் கட்டிடத்திற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

---------

திருச்சி மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீடுத் திட்டத்தின்கீழ், விவசாயிகள் பயிர்களை காப்பீடு செய்யுமாறு வேளாண்துறை இணை இயக்குனர் திருமதி வசந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

----------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் திருநங்கைகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

-------------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் போதைப்பொருளை கடத்தியது தொடர்பாக 11 பேர் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் கூறியுள்ளார்.

---------------------

வேலூர் மாவட்டம் அல்லேரிமலையில் காவல்துறை கண்காணிப்பாளர் திரு மயில்வாகணன் தலைமையில் 20-க்கும் மேற்பட்டோர் கள்ளச்சாராய ஒழிப்பு கண்காணிப்புப்பணியை மேற்கொண்டனர்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் பட்டம் வென்றார்.

ஜார்ஜியாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச்சுற்றில் அவர், இந்தியாவின் **Koneru Humpy** -ஐ வென்றார்.

---------------

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் **Jechen-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவுகளில் **Rushil Bendi, Naisha, Rhythm,** தங்கப்பதக்கம் வென்றனர்.

கலப்பு இரட்டைப்பிரிவில் **Abhijith – Vacasya** இணை தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Abhijith-**ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Vacasya-**ம், மகளிர் ஜூனியர் பிரிவுகளில் **Kanthi Sree** -ம், **Jessy Raj**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Hari -Shriya** இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Hari**-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

------------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஆசிய **Cadet Taekwondo** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------

**Dole** கோப்பைக்கான செஸ் போட்டியில் இந்தியாவின் இனியன் பட்டம் வென்றார்.

**<<<<<END>>>>**